நண்பகல் 12–00

4. அறிக்கைகள் அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன், சட்ட விதிகள் ஆய்வுக் குழு தலைவர். (குறுக்கீடு) நீங்கள் சற்று உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, நீங்கள் உட்காருங்கள்.*

***திரு. பெ. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தை உருவாக்கி, மூன்று முறை தொடர்ந்து தமிழகத்தில் நல்லாட்சி புரிந்து, சத்துணவு தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) நூற்றாண்டு விழா காணும் இந்த நாளில் புரட்சித் தலைவர் அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

இலட்சக்கணக்கான தொண்டர்களையும் உயர்ந்த பதவியில் அமர வைத்து, அழகு பார்த்து, ஆயிரக்கணக்கான திட்டங்களை தமிழக மக்களுக்குத் தந்து, தமிழ் மக்களை வாழ வைத்த சமூக விஞ்ஞானி, (மேசையைத் தட்டும் ஒலி) மறைந்த முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

கழகத்தின் பொதுச் செயலாளர் மதிப்புமிகு சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், தொண்டர்களின்மீது வீசும் இளந்தென்றல், மரியாதைக்குரிய அண்ணன் திரு. டி.டி.வி. தினகரன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 1–வது முதல் 4–வது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.